நிதித் துறையின் ஒத்துழைப்பைப் பொறுத்து - அரசு சட்டக் கல்லூரிகள் திறக்கப்படும்!

கீழ்பென்னாத்தூர் மற்றும் சங்கரன்கோவிலில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைக்க உரிய நடவடிக்கை!

சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.ரகுபதி தகவல்!

சென்னை, ஜூன் 25 - சட்டப்பேரவையில் உறுப்பினர் கேள்வியும் அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பதிலும் வருமாறு: -

பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி: எனது கீழ்பெண்ணாத்தூர் தொகுதிக்கு நீதிமன்றம் அரசின்மூலம் வழங்கப் பட்டிருக்கி றது. அதற்கான தற்காலிக இடத்தை கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டு, நான்கு மாதங்களாக மாவட்ட நீதிமன்றத்திலே அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், அது உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதி பெற்று திறக்கப்படுவதற்கு காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த அனுமதியை விரைவிலே பெற்று, கீழ்ப் பெண்ணாத்தூரிலே நீதிமன்றம் திறப்பதற்கு ஆவன செய்யப்படுமா? அந்த நீதிமன்றத்திற்கு தேவையான இட வசதிகளை ஏற்படுத்தி, புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? பல்வேறு நீதிமன்ற ங்களிலே நீதிபதிகள் இல்லாமல் பல வழக்குகள் தாமதமாகிறது என்ற நிலை எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கிறது. ஆகவே, அந்த நீதிபதிகள் பணியிடங்களை நிரப்பு வதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் எஸ்.ரகுபதி: நீதிபதிகளினுடைய பணியிடங்களை நிரப்புவதற்கு முதலமைச்சர் அவர்களின் அரசு, உயர் நீதிமன்றத்தினு டைய ஆலோசனையின்படி இன்றைக்கு உரிய நடவடிக்கைகள் எடுத்து பல பணியிடங்கள் இன்றைக்கு பூர்த்திச் செய்யப்பட்டுள்ளன. கீழ் பெண்ணத்தூரைப் பொறுத்தவரைக்கும், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு பொறுப்பு நீதியரசர்க ளாக இருக்கக்கூடிய உயர் நீதிமன்றத்தினுடைய நீதியரசர்களோடும், மாவட்ட நீதிபதிகளினுடைய பரிந்துரைகளோடும், எவ்வளவு விரைவிலே கீழ் பெண்ணாத்தூரிலே Munsif cumJudicial Magistrate Court கொண்டுவர முடியுமோ, அதைக் கொண்டு வருவதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்.

இராமச்சந்திரன்: என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியில் புதிதாக உருவாக்கப்பட்ட அஞ்செட்டியில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தை அதாவது Magistrate Courtஐ உருவாக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் எஸ்.ரகுபதி: ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் அதாவது, Munsif cumJudicial Magistrate Court கொண்டுவர வேண்டும் என்பதுதான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய விருப்பம் ஆகும். ஏனென்று சொன்னால், மக்களை அலைக்கழிக்கக் கூடாது. அவர்களுக்கு அருகிலேயே நீதி கிடைக்க வேண்டு மென்பதற்கான ஏற்பாடுகளைத் தான் இன்றைக்கு செய்து வருகின்றோம். எனவே, இன்றைக்கு நிதித்துறையினுடைய ஒப்புதலோடு எந்தளவுக்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ, அந்தளவுக்கு நிச்சயமாக அங்கே நம்முடைய MunsifcumJudicial Magistrate Court கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

க.அன்பழகன்: நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், இந்தியாவே தமிழகத்தை உற்றுப்பார்க்கின்ற வகையில் 40க்கு 40 வென்றெடுத்த மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) அவேரோடு பணியாற்றிய தோழமை யையும் இந்த மாமன்றம் பாராட்டி, வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள், தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி தருவதாகச் சொன்னார்கள். திருச்சி மாவட்டத்தில் ஒரு சட்டக் கல்லூரி இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே ஒரு தனியார் சட்டக் கல்லூரி இருக்கிறது. கும்பகோணம் மாவட்ட தலைநகரமாக ஆக்கப்படுவதற்கான வாய்ப்பினை நம்முடைய முதலமைச்சர்

அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் சட்டக் கல்லூரியினை கும்ப கோணம் மாவட்டத்திற்கு கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் எஸ்.ரகுபதி: தஞ்சை மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைத்து தருவதாக நாங்கள் எந்த விதமான வாக்குறுதியும் தரவில்லை. ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கின்றேன். ஒரு சட்டக் கல்லூரி உருவாக வேண்டுமென்று சொன்னால், 100 கோடி ரூபாய்க்கு மேல் இன்றைக்கு அரசிற்கு செலவாகிறது. ஆனால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சட்டக் கல்லூரியை உருவாக்க வேண்டு மென்கிற நல்ல எண்ணம் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இருந்தாலும், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களிடத்திலே அதற்கான தொகைகள் இன்றைக்கு இல்லாத காரணத்தாலேதான், அது தாமதப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, நிச்சயமாக நிதித் துறை எந்தளவுக்கு எங்களுக்கு ஒத்து ழைப்பு தருகிறதோ, அந்தளவுக்கு அரசு சட்டக் கல்லூரிகள் திறக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

வானதி சீனிவாசன்: கோவை மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்குள்ளாக குழந்தை கள் காப்பகம் ஒன்று அமைக்கப் படவேண்டுமென்பது அங்கு இருக்கக்கூடிய பெண் வழக்கறிஞர்களுடைய நீண்ட நாள் கோ ரிக்கை. சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் நான் அதை கொடுக்கப் போகும்போதுகூட நீதிமன்ற வளாகத்திற்குள் இதுமாதிரி பண்ணமுடியாது என்று மாவட்ட நீதிபதி அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதனால் நாங்கள் கொடுப்பதற்கு முடிந்தா ல்கூட அங்கு இதுமாதிரி தடை இருப்பதால் அந்தக் காப்பகம் அமைக்க முடியவில்லை. இன்றைக்கு நிறைய பெண் வழக்கறிஞர்கள் தொழிலுக்கு வந்துகொண்டு இருக்கிறார்கள். அதனால் குழந்தைகள் காப்பகம் அங்கு அமைக்கப்பட முடியுமா என்பதை கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் எஸ்.ரகுபதி: சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியைத் தந்தால் நிச்சயமாக உயர் நீதிமன்ற த்திலே சொல்லி, உடனடியாக அங்கே குழந்தைகள் காப்பகம் அமைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயமாக மேற்கொள்வோம். எவ்வளவு விரைவிலே செய்யமுடியுமோ அதை உயர்நீதிமன்றத்தினுடைய அனுமதி யோடு செய்துதருவோம்.

ஈ.ராஜா: தென்காசி மாவட்டம் தனியாக பிரிக்கப்பட்ட மாவட்டம். தற்போதுதான் மாவட்ட நீதிமன்றம் நியமிக்கப் பட்டிரு க்கிறது. சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைத்துத் தரப்படுமா என்பதை தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் எஸ்.ரகுபதி: தென்காசி மாவட்டத்தில் சங்கரன்கோவிலே கூடுதலாக ஒரு மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைய வேண்டுமென்று சொன்னால், அதற்கு அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய உயர்நீதிமன்றத்தினுடைய பொறுப்பிலிருக்கக்கூடிய நீதிபதிகளும், மாவட்ட நீதிபதியும் அங்கிருந்து உயர் நீதிமன்றத்திற்கு கருத்துக்கள் அனுப்பப்பட்டு, அதனுடைய பரிந்துரையின் அடிப்படையிலே அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை களை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர்: சட்டத் துறை அமைச்சரிடம் பேரவைத் தலைவரிடமிருந்து ஒரு கேள்வி இருக்கிறது. உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்ற திட்டத்தில் முதல்வர் அவர்களும், தாங்களும் திசையன்விளை தாலுகா, திசையன்விளையில் ஒரு MunsifcumJudicial Magistrate Court அமைக்க அரசாணை வெளியிட்டிருக்கிறீர்கள். எப்போது அது ஆரம்பிக்கப்படும் என்பதையும் தங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்.

அமைச்சர் எஸ்.ரகுபதி: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மானாமதுரையில் நடைபெற்ற அங்கே இருக்கக்கூடிய combined court building திறப்பு விழா நிகழ்ச்சியிலே அங்கிருக்கக்கூடிய நீதியரசர்களிடத்திலே எங்களுடைய சட்டப்பேரவைத் தலைவர் எங்களுடைய கோரிக்கை வரும்பொழுது அதைக் கேட்பார்கள் என்ற செய்தியை அவர்களிடத்தில் தெரிவித்திருக்கின்றேன். எனவே, மிக விரைவிலே உயர்நீதிமன்றம் அங்கே அதைத் திறப்ப தற்கான வழிகளைச் செய்யும். முதலமைச்சர் அவர்கள் அதற்கான அனுமதியைத் தந்து, எங்களுக்கான நிதியையும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, அதில் எந்தவிதமான சிக்கலும் இருக்காது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலளித்தார்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, 177 வது பாகத்திற்கு உட்பட்ட நடுத்தெரு, பழைய காலினி, சென்னை பைபாஸ் ரோடு, அங்காளம்மன் தெரு ஆகியவற்றில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி, தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மற்றும் கழகத்தினரிடம், வேளாண்மை துறை அமைச்சர் மாண்புமிகு எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் நேரடியாக சென்று எல்லா பகுதிகளிலும் ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது முன்னாள் எம்எல்ஏ புஷ்பராஜ்,ஒன்றிய செயலாளர் ஜெய. ரவிதுரை, வானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பி .கே. டி. முரளி, இளைஞர் அணி அமைப்பாளர் இரா. ராஜவேல், கிளை செயலாளர் சந்திரன், பாக முகவர் அறிவழகன், இளைஞர் அணி நிர்வாகிகள் பன்னீர்செல்வம், பழைய காலனி ரத்தினசபாபதி, ஜே. அஜித் குமார், ஜே. அரவிந்த், மாதவரம் வடக்கு பகுதி 16 வது வட்டம் டோமினிக் பிரான்சிஸ், தேவராஜ், செமீன் எடிசன்,நித்யா என்கின்ற நித்தியானந்தம், எடிசன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

புழல் எம். நாராயணன் முன்னிலையில்

விக்கிரவாண்டி 177வது பாகத்தில் மாதவரம் வடக்கு பகுதி திமுகவினர் இடைத்தேர்தல் பணி!

அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் - மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆய்வு

விழுப்பரம், ஜூன் 25 -

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி பகுதியில் நடைபெற்ற உள்ள இடைத்தேர்தலில் கழக வேட்பாளராக போட்டியிடும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆதரவு பெற்ற, அன்னியூர் சிவா அவர்களை ஆதரித்து 177 ஆம் எண்ணுள்ள பாகத்தில், மாதவரம் வடக்கு பகுதி திமுக வினர் தீவிர களப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்,

விக்கிரவாண்டி ஒன்றியம் 177 வது பாகத்திற்குட்பட்ட நடுத்தெரு, பழைய காலனி, சென்னை பைபாஸ் ரோடு, அங்காளம்மன் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள வாக்காளர்களிடம் விவரங்கள் சேகரிக்கும் பணி மற்றும் வாக்கு சேகரிக்கும் பணி ஆகியவை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம் எல் ஏ அவர்களின் அறிவுறுத்தலின் படி, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன்படி மாதவரம் வடக்கு பகுதி திமுகவினர்,மேற்படி பகுதிகளில் வீடு வீடாக சென்று வாக்காளர் விவரங்களை சேகரித்து வருகின்றனர்.

விக்கிரவாண்டி ஒன்றிய செயலாளர் ஜெய. ரவிதுரை மேற்பார்வையில் நடைபெற்று வரும் இந்த பணிகளை, வேளாண்மை துறை அமைச்சர் மாண்புமிகு எம் .ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் நேற்று ஒவ்வொரு பகுதியாக சென்று நேரடியாக சென்று ஆய்வு செய்தார்.

நடுத்தெரு, பழைய காலணி ஆகிய பகுதிகளில் வாக்கு விவரங்களை சேகரித்துக் கொண்டிருந்த, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.

நாராயணன் மற்றும் வானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் மற்றும் வானூர் பெருந்தலைவர் பி. கே. டி. முரளி ஆகியோரிடம் பகுதி இந்த விவரங்களை கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது முன்னாள் எம்எல்ஏ புஷ்ப ராஜ்,கிளைச் செயலாளர் சந்திரன், வானூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா. ராஜவேல், பாக முகவர் அறிவழகன், இளைஞர் அணி நிர்வாகிகள் பன்னீர்செல்வம், அய்யூர் அகரம் பழைய காலனி ரத்தின சபாபதி, ஜே. அஜித் குமார், ஜே. அரவிந்த், மாதவரம் வடக்கு பகுதி 16 வது வட்டம் டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், பாக முகவர் நித்தியா என்கின்ற நித்தி யானந்தம், எடிசன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

தொடர்ந்து மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வாக்காளர் விவரங்கள் சேகரிக்கும் பணி வாக்கு சேகரிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

களக்காடி எல்லப்பன் ஏற்பாட்டில் - எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் முன்னிலையில்

சைதை மேற்கில் - அதிக மதிப்பெண் பெற்ற 17 மாணவர்களுக்கு தங்க நாணயம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, ஜூன் 25

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்குப் பகுதிக் கழகம் சார்பில் பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் ஏற்பாட்டில், 139 வது வட்டம், ஜாபர்கான்பேட்டை சென்னை உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்புத் தேர்வில் 500க்கு 400க்கு மேல் மதிப் பெண் பெற்ற 17 மாணவ மாணவியர்களுக்கு ஒரு கிராம் தங்க நாணயம் வழங்கும் விழா இன்று (25.06.2024 செவ்வாய்க்கிழமை) காலை 8 மணிக்கு மணிக்கு பள்ளி வளாகம், ஜாபர்கான் பேட்டையில் நடைபெறுகின்றது.

விழாவிற்கு பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமை வகிக்கிறார். சைதை மேற்கு பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ், சைதை மா. அன்பரசன், வழக்கறிஞர் ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். சைதை த.சம்பத், வி.பி.ஜானகிராமன், ஆர். ரமேஷ், கவிதா கௌதமன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணி, சைதை சாதிக், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ஜி.கே. ராமச்சந்திரன் ஆகியோர் வரவேற்புப் பேசுகின்றனர்.

மாணவ மாணவியர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், 10 ஆம் வகுப்புத் தேர்வில் 500க்கு 400க்கு மேல் மதிப் பெண் பெற்ற ஒவ்வொரு மாணவ மாணவியர்களுக்கும் தலா ஒரு கிராம் தங்க நாணயம் வழங்குகிறார்.

இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், எம்.எஸ்.ஹரிபாபு, கோ.பாஸ்கர், அஞ்சல் ராமன், வீ.மதி வா ணன், டி.என்.சிவமணி, கிண்டி ஆர். எல்.செல்வம், கு.புகழ்வேந்தன், பொன்.ஜெய்சிங், பால்காரர் ஏ.ரவி, சைதை ஆர்.ரவி, ஜி.பாபு, மு.கதிரவன், பொ. பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்தி, சுந்தரம், அ.அயாத்பாஷா, இ.வரதன், மா.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், சைதை த.மணி, சைதை எல். சந்திரன், சி.டி.காசிநாதன், து.முரளி, வி.சபரி, அ. சுப்பிரமணி, ஜி.ஏழுமலை, கொடி சுரேண், டி. கோபாலகிருஷ்ணன், எஸ்.முகமதுஅலி, என்.ராஜேஷ், மு. காளியப்பன், நியூ காலனி சம்பத், வி. பி.சிவக்குமார், பி.ஆசை த்தம்பி, ஆயில் சரவணன், சி. ஆறுமுகம், எஸ்.மல்லிகா, சி. மங்கையர் திலகம், து. வினோத், க.அருண், ஜிம். க.பிரபு, ம.சுகுமார், இரா. சத்யா, பி.டி.சி.ரவி, சி. ராஜா, ம.திலிப்பன், ஜெ.கதிரவன், சி.வி.பிரவின், காரைக்குடி செல்வம், தெ. கொரியகுமார், ஜெ. கெவின், ஆர். தண்டபாணி, சு.நித்தியா னந்தம், ஜி.கங்காதரன், மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

எ.பாபு நன்றி கூறுகிறார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பகுதிக் அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.

எழும்பூர் வடக்குப் பகுதி 77 (அ.) வட்டம்

மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி இல்ல மணவிழா வரவேற்பு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. வாழ்த்து!

சென்னை, ஜூன்,25

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி, 77 அ வட்டம் மாவட்டக் கழகப் பிரதிநிதி மா.காந்தியின் சகோதரி ஆனந்திகே.நாகராஜ் ஆகியோரின் மகன் என்.ராம்கி ஏ. மைதிலி ஆகியோரின் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று (25.6.2024செவ்வாய்க் கிழமை) மாலை 6 மணிக்கு சென்னை மாநகராட்சி சமுதாயநலக் கூடத்தில் (நல்லதம்பி திருமண மண்டபம், புளியந்தோப்பு பட்டாளம்) நடைபெறுகின்றது.

இம் மணவிழாவில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர் பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் தயாநிதி மாறன் எம்.பி., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் சொ. வேலு, வி.சுதாகர், மற்றும் கே.எஸ். இரவிச்சந்திரன், வி. அபாய், ஆர்.டி.சங்கர் நானா, இ. ஆறுமுகம், மு.அசோக்குமார், மு.தமிழ்ச்செ ல்வம், எஸ்.சாண்டில்யன், கே.வெங்கடேசன், எஸ். புனிதன், மு.கு.சு.மோசஸ், ஏ.பாண்டியன், இ.குமரன், க.கோ.கோமகன், கே. சுப்பராயன், ஆதி அசோக், தனபிரபாகரன், கே.ராஜா, ஏ. முத்து, வி.ரவிச்சந்திரன்,கே. சரண்ராஜ், ஆர்.கணேசன், பி. ராமு, பி.சந்திரசேகர், பி.ராஜசேகர், ஏ.நித்தியானந்தம், என். நிதிஷ்குமார், வி.மணிகண்டன், ஆர். நி ரே ஷ் , எ ஸ் . கே த் தீ ஷ் , ஏ.ராஜசேகர், வி.ஆர். பரத் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழாவிற்கு வருகை தருவோரை மா.காந்தி, ஜி.கிளியம்மாள், மா.பார்த்தி பன், பி. சாந்தி, மா.கார்த்திகேயன், கே. கலைவாணன், மா.முருகன், எம். மைதிலி, டபிள்யூ.பொன்மொழியன், டபிள்யூ. மணிமொழி, ஏ. வினோத்குமார், ஜி.ராஜாத்தி, எஸ்.ராமச்சந்திரன், ஜி.தினகரன், டி.கே.எஸ்.பிரபாகரன், எஸ். கார்த்திக், கே.ஜெயபிரகாஷ், டி.கே. எஸ்.சூரியா, பி.கவிதாசன்,டாக்டர் கே.கோகுல கிருஷ்ணன், என்.வெங்கடேஷ், எம். முரளிகிருஷ்ணன், பி.ஸ்ரீராம், எம்.ஆகாஷ், ஆர்.மகதேவ், வி.கௌதம், கே.கௌசிக், ஆர். சம்யுக்தா,வி.சிக்ரம், கே.கிரித்விக், டி.சித்தார்தன், பி.மகிழினி, எஸ்.அனுசுயா, பி.பிரபாவதி, எம்.பாக்கியம், ஆர்.இளவரசி, பி.பிரியதர்ஷினி, கே.கனிமொழி, டி.நிஷா, பி.கமலி,கே. நிலா, ஆர்.கீர்த்தனா, பி.ஸ்ரீமதி, எம்.மித்ரா, எம்.சாதனா மற்றும் பலர் வாழ்த்துகின்றனர்.

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் குறித்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் செயல்வீரர் கூட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. நடைபெற உள்ள சட்டமன்ற இடைத் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். உடன் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், கே.திராவிடபக்தன், வி.சி.ஆர். குமரன், எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், ஒன்றிய செயலாளர் ஜெயபாலன் உள்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.

எளிய மக்களின் நல வாழ்வில் அக்கறை கொண்ட

மனிதநேய மருத்துவர் பெ.குகானந்தம் மறைவு ஈடுசெய்ய முடியாதது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 25 -

மருத்துவர் பெ.குகானந்தம் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு: -

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாநகர நல அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும் சிறந்த மருத்துவச் சேவையாற்றியவருமான மருத்துவர் பெ. குகானந்தம் அவர்கள் நுரையீரல் தொற்று காரணமாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

மருத்துவம் என்பது மிக உன்னதமான மனிதம் போற்றும் துறை என்பதற்கான சான்றாக தம் வாழ்நாள் முழுவதும், அத்துறையில் அளப்பரிய சேவைகளை ஆற்றி வந்தவர் மருத்துவர் குகானந்தம் அவர்கள். சென்னை நகரின் மேயராக நான் இருந்த காலத்தில், சென்னை மாநகரச் சுகாதார அலுவலராகப் பணியாற்றிய மருத்துவர் திரு. குகானந்தம் அவர்கள், மாநகர மக்களின் நலவாழ்வை மேம்படுத்துவதற்கான பல்வேறு ஆலோசனைகளையும், களப் பணிகளையும் எனக்கு உறுதுணையாக இருந்து ஆற்றியவர்.

அரசுப் பள்ளியில் படித்து மருத்துவராக உயர்ந்த எளிய பின்புலத்தைக் கொண்டவர் என்பதால், தம் வாழ்நாள் முழுக்க எளிய மக்களின் நலவாழ்வில் அக்கறை கொண்டவராகவும், அவர்களுக்காக பாடுபடுவதில் ஆர்வம் கொண்டவராகவும் அவர் திகழ்ந்தார்.

சென்னை மீதும், அந்த மண்ணின் எளிய மக்கள் மீதும் அளப்பரிய நேசத்தைப் பொழிந்த மருத்துவர் திரு. குகானந்தம் அவர்கள், சென்னை சுகாதாரமான நகரமாகவும், சுகவாழ்வுக்கான வசிப்பிடமாகவும் திகழ வேண்டும் என்பதில் தீராத வேட்கை கொண்டவராகத் திகழ்ந்தார். குறிப்பாக, குடிசைவாழ் மக்களின் நலவாழ்வில் எப்போதுமே தனி அக்கறை கொண்டவராகச் செயல்பட்டு வந்தார்.

அதற்கேற்ப, பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி சுகாதார அலுவலராக பணியாற்றிய போது, எளிய மக்களின் நலவாழ்வுக்காக அயராது பாடுபட்ட மருத்துவர் திரு. குகானந்தம் அவர்கள், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை இயக்குநராகப் பணியாற்றிய காலத்தில், அந்த மருத்துவமனையின் கட்டமைப்பையும், தரத்தையும் மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, ஏழை, எளிய மக்களின் உயிர்காக்கும் மையமாக அதனை மாற்றினார்.

1992 - 1993 காலக்கட்டத்தில் சென்னையில் காலரா நோய் பரவிய போது, எளிய மக்களை அந்நோயில் இருந்து காப்பாற்றுவதற்கான செயல்திட்டங்களுடன், சிறப்பான களப்பணியை ஆற்றியவர்.

அதனைத் தொடர்ந்து மாநகர நல அலுவலராகவும் சிறந்த மருத்துவம் மற்றும் சுகாதார சேவைகளை வழங்கிப் பணியாற்றி 2014ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளார்.

அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும், தமது மருத்துவத் தொண்டில் இருந்து அவர் ஒருபோதும் ஓய்வு பெறவில்லை. கொரோனா காலத்தில் அரசு அமைத்த சிறப்பு ஆய்வுக்குழுவில் பங்கேற்ற அவர், காலரா, டெங்கு உள்ளிட்ட தொற்றுநோய்த் தடுப்பில் தமக்கிருந்த அனுபவத்தைப் பயன்படுத்தி, மக்களை அப்பேரிடரில் இருந்து மீட்கப் பேருதவியாக இருந்தார்.

இத்தனை சிறப்பு வாய்ந்த இணையற்ற மனிதநேய மருத்துவரான மருத்துவர் திரு. குகானந்தம் அவர்களின் மறைவினால் வாடும் அவரது துணைவியார், குடும்பத்தினர், உறவினர்கள், மருத்துவத்துறை சார்ந்த சக நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பெரம்பூர் 44 வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டம்!

மரு. நா.எழிலன் எம்.எல்.ஏ.-ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - கலாநதி வீராசாமி எம்.பி. சிறப்புரை! த.ஆறுமுகம் தலைமை!

சென்னை, ஜூன், 25

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி 44 வது வட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (25.6.2024செவ்வாய்கிழமை) மாலை 6 மணிக்கு பழனி ஆண்டவர் கோயில் தெரு, பெரம்பூரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு வட்டக் கழகச் செயலாளர் பெரம்பூர் த. ஆறுமுகம் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கி.ராஜி, பி.சண்முகம், இரா.முரளிதரன், க.பரத், வி.மணி, பா.வினோத், ஜெ. கோமதி, நா.தட்சிணாமூர்த்தி, கோ.பொன்னிவளவன், ப.பிரதீப், பூ.வேல்முருகன் ஆகியோர் வரவேற்றப் பேசுகின்றனர்.

இக் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கி கழக மருத்துவர் அணிச் செயலாளர் மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ., மாவட்டக் கழகப் பொறுப்பார் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில் இரா.நரேந்திரன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன்,ந.சர்ப ஜெயதாஸ், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, சி.ஆனந்தி, க.சர்மிளா காந்தி, ஏ.தமிழ்ச்செல்